# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### அவசரக் கூட்டப்பொருள்

2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th>வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள்</th><th>மாமன்ற தீர்மானம்</th></tr>
<tr><td>14.11.13</td><td>1. இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக, தற்பொழுது உள்ள பருவநிலை மாற்றத்தை முன்னிட்டும் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு மற்றும் மலேரியா போன்றவற்றை தடுக்கும் பொருட்டும் கொசு புழுக்களை கட்டுப்படுத்தும் வேதி புகை மருந்து தெளிக்க தேவைப்படும் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றை அவசர அவசியம் கருதி வாங்கவும், அதற்காக ஏற்படும் தோராயமான செலவு தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம்.<br>எச்4/9462/12</td><td>183) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>2. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31.10.2013 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு. பேச்சிமுத்து/முனியாண்டி, என்பவருக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டு தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியாளர் பெயர் திரு/திருமதி</th><th>ஓய்வு பெற்ற தேதி</th><th>சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை</th><th>வட்டி</th><th>பங்கீட்டுத் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு. பேச்சிமுத்து/ முனியாண்டி</td><td>31.10.2013</td><td>ரூ. 2960/–</td><td>ரூ. 15417/–</td><td>ரூ.10000/–</td></tr>
</table>
எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளருக்கு மேற்கண்ட தொகையினை மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம்<br>எச்2/10570/2013</td><td>184) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>3. தூத்துக்குடி மாநகராட்சி, வ.உ.சி. கல்லூரி மைதானத்தில், தமிழ்நாடு செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடைபெறவுள்ள அரசு பொருட்காட்சியில், தூத்துக்குடி மாநகராட்சியின் செயல் திட்டங்களை பொதுமக்களுக்கு</td><td>185) பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | தெரிவிக்கின்ற வகைக்கு, தூத்துக்குடி மாநகராட்சியின் உள்அரங்கம் மற்றும் வெளிப்புற முகப்பு தோற்றங்கள் ஏற்படுத்தி அரங்கம் அமைப்பதற்கு, மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.3,00,000/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ5/17019/12 | |
| | 4. Bio Methanation Plant ஒன்று புதிய பேருந்து நிலையம் அம்மா உணவகத்தில் நிறுவியதற்கும், அதற்கு ஆன செலவு ரூ. 1,07,000/—க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்<br>எச்1/5668/13 | 186) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சி பகுதி சிதம்பரநகர் பகுதியில் இயங்கி வரும் அரசு கிளை நூலகத்தை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 46, சிவந்தாகுளம் பகுதியில் உள்ள மாவட்ட கருவூலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்திற்கு மாற்றம் செய்து இயங்குவதற்கு ஏதுவாக அதன் வாடகை நிர்ணயம் செய்து தரும்பட்சத்தில் செலுத்த தயாராக இருப்பதாக மாவட்ட நூலக அலுவலர் அவர்களின் 10.07.2013ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பொதுப்பணித்துறையின் கட்டிட வாடகை நிர்ணய அடிப்படையில் கணக்கீடு செய்து மேற்கண்ட கட்டிடத்திற்கான மாதாந்திர வாடகை ரூ.10500/— என நிர்ணயம் செய்து நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை விபரத்திற்கு சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில் சிவந்தாகுளம் பகுதியில் உள்ள மாவட்ட கருவூலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் தங்கள் அலுவலகத்திற்கு மாமன்ற அனுமதியுடன் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட நூலக அலுவலர், தூத்துக்குடி அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் 03.09.2013இல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் மாவட்ட நூலக அலுவலர் அவர்களின் 12.11.2013ம் தேதிய கடிதத்தில் மேற்படி புதிதாக கட்டப்பட்ட நூலகத்தை வாடகை இல்லா இலவசக் கட்டிடமாக தந்து உதவ கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணத்திற்கான செலவினத் தொகையினை நூலக நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார். எனவே பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ/மாணவியர்கள், வாசகர்கள் பயன்பெறும் வகையில் சிவந்தாகுளம் பகுதியில் உள்ள மாவட்ட கருவூலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை இலவசமாக வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்<br>இ1/1617/2013 | 187) பொதுப்பணித் துறையின் கட்டிட வாடகை நிர்ணய அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள மாதாந்திர வாடகை ரூ.10500/— செலுத்துவதற்கு சம்மதிக்கும் பட்சத்தில் மேற்படி நூலக கட்டிடத்தினை அரசு கிளை நூலகத்திற்கு மாத வாடகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : 13.11.2013

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி